*கவனிக்க.- 2015.10.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1936 - 2015 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2015.10.09

*1936 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1336 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனை | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1344 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## நுவரெலியா மாநகர சபை

நுவரெலியா மாநகர சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள பின்வரும் ஆரம்ப (தேர்ச்சி அற்ற) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நுவரெலியா மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.* PL 1 - 2006 A

| | | |
|---|---|---|
| 1. பூங்கா கண்காணிப்பாளர் | III | 01 |
| 2. வேலை/வெளிக்கள கண்காணிப்பாளர் | III | 01 |
| 3. சுகாதார கண்காணிப்பாளர் | III | 02 |

**சம்பள முறை.-** 11,730-10x120-10 x 130-10 x 145-12 x 160-17,600/- (06/2006 (iv) இற்கமைய இயைபுடைய படிமுறை இருத்தல் வேண்டும்)

2. **சம்பள அளவுத்திட்டம்.**-இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (iv) இல் (PL I - 2006 - A) இற்கமைய ரூ. 11,730-10x120-10 x 130-10 x 145-12 x 160-ரூபா 17,600 ஆகும். (தரம் III இற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டு மூன்று வருட (3) காலம் முடிவடைவதற்கு முன்னர் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.)

3. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்:**

3.1 சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டியதுடன், நன்னடத்தையுள்ளவர்களாகவும், நல்ல தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்;

3.2 விண்ணப்பதாரர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். (சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்தில் சேவையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

3.3 நுவரெலியா மாநகர சபை அதிகார பிரதேசத்தில் குறைந்தபட்சம் 3 வருட காலம் நிரந்தர வதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதுமான அளவில் தகுதியானவர்கள் இப்பிரதேசத்தில் இல்லாத பட்சத்தில் மாத்திரமே அருகில் உள்ள உள்ளூராட்சி அதிகார பிரதேச விண்ணப்பதாரர்கள் பற்றி கவனம் செலுத்தப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்:**

4.1 இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியமுடையதுமாகும்.

4.2 விதவைகள்/தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

4.3 மாநகர ஆணையாளரினால் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் சபையின் அதிகார பிரதேசத்தில் வதிவினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

4.5 III ஆவது வகுப்பில் பதவி வகிப்போரை மூன்று வருடகால பயிற்சியின் முடிவிலும் ஏனைய வகுப்புகளில் பதவி வகிப்போரை ஒரு வருடகால பயிற்சியின் முடிவிலும் வேலை, நன்னடத்தை மற்றும் வரவு ஆகியவற்றில் காட்டும் திருப்தி அடிப்படையில் நிரந்தரமாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

4.6 மாநகர ஆணையாளரினால் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் அவ்வகையில் போதிய அளவு பிணையை பணத்தில் அல்லது நிர்ணயிக்கப்படும் வேறு முறையில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

4.7 தாபன விதிக்கோவையின் II ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏனைய பொது நிபந்தனைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

4.8 அரச, மாகாண அரச சேவை ஆணைக்குழு, உள்ளூராட்சி ஆணையாளர், மாநகர ஆணையாளர் ஆகியோரால் தற்போது விதிக்கப்பட்டுள்ளதும், காலத்திற்கு காலம் விதிக்கப்படுவதுமான நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

4.9 நியமனம் பெற்றுக்கொள்வோர் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையே இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர். உள்ளூராட்சி சபைகளுக்கிடையேயான இடமாற்றம் மாநகர ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும்.

4.10 01/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து மாகாண அரச சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 5 வருட காலத்திற்குள் அரச சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியில் தகைமையை பூர்த்தி செய்யாதவர்களின் சம்பள ஏற்றம் நிறுத்தப்படும்.

5. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான கல்வித் தகைமை.**- இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கல்வி பொது தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் 2 பாடங்களில் திறமை சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டியதுடன், இதில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **உடல் ரீதியிலான தகைமை.**- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நல்ல கண்பார்வையை கொண்டிருப்பதுடன், பகல் நேரத்திலும், இரவு நேரத்திலும் சேவையாற்றுவதற்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை:**

7.1 விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள, நியமனம் பெற்றுக்கொள்வதற்கான ஆகக் குறைந்த தகைமையை கொண்டுள்ள சகலருக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைத் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும். அந்நேர்முகப்பரீட்சையில் பின்வரும் ஆவணங்களையும் அதன் நிழற்படப்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்புச்சான்றிதழின் மூலப்பிரதி ;
(ii) உரிய கல்விச் சான்றிதழின் மூலப்பிரதி/பாடசாலையிலிருந்து விலகிய சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நன்னடத்தை சான்றிதழ்கள் ;
(v) வேறு தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;
(vi) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்.

7.2 நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகளுள் ஆகக்கூடிய தகைமைகளைக் கொண்டுள்ளோர் தெரிவு செய்யப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

7.3 நுவரெலியா மாநகர சபையில் தற்போது தற்காலிக, அமைய, பதிற் கடமை, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்கள் தொடர்பில் முன் உரிமை அளிக்கப்படும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.**-

8.1 ஒரு விண்ணப்பதாரர் ஒரு பதவிக்காக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

8.2 அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்படிவத்திற்கேற்ப A4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து 2015.11.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "மாநகர ஆணையாளர், மாநகர சபை, நுவரெலியா" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் போதுமானது)

8.3 விண்ணபத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நுவரெலியா மாகர சபையின் பதவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்த்துக்கொள்ளல்" என குறிப்பிடல் வேண்டும்.

8.4 முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் பாடசாலை அதிபரொருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது வருடாந்த சம்பளமாக 2,40,360 ரூபா அல்லது அதற்கு அதிகமாக சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

8.6 தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

9. சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் நுவரெலியா மாநகர சபையினால் நிர்ணயிக்கப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலப்பகுதியில் இவ் ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்தும் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்யும் அல்லது திருத்தம் செய்யும் அதிகாரம் மாநகர ஆணையாளருக்கு உரித்தாகும்.

பீ. ஜி. சுனில் அபேகோன்,
மாநகர ஆணையாளர்,
நுவரெலியா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
நுவரெலியா,
2015, செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாநகர சபையின் ....................................... பதவிக்கான விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
முதலெழுக்களைக் குறிக்கும் பெயர்கள் :----.

2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
பிரதேச செயலாளர் பிரிவு:----.
கிராம அலுவலரின் பிரிவு இலக்கம் :----. பெயர் :----.

3. நிரந்தர வதிவு முகவரி:----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. பால் (ஆண்/பெண்) :----. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது:-
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் காலம் :-
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

7. இலங்கைப் பிரசாவுரிமை பரம்பரையினாலா/பதிவின் மூலமான என்பது :----.
விபரங்களை குறிப்பிடுங்கள் :----.

8. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பரீட்சைகள் பற்றிய விபரம்)

(i) சித்தியடைந்த ஆண்டு/தரம் :----.
(ii) க.பொ.த. (சா./தரம்) பரீட்சை :----.
சுட்டிலக்கம் :----. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க.பொ.த. (உ./தரம்) :----.
சுட்டிலக்கம் :----. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

தொழில் தகைமைகள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) :----.
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------

10. சேவை அனுபவம் :----.
(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி:----.
(iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:----.
(iv) இதற்கு முன்னர் சேவை புரிந்த இடமும் வகித்த பதவியும் :----.

11. நீங்கள் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும். உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள்/தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நியமிக்கப்படுவதற்கு முன் தெரியவரின் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் தெரியவரின் நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:----.

**தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச மாகாண சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத்தலைவரின் சான்றுரை**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி ...................................................................................................... அவர்கள் ............... ஆந் திகதி முதல் இவ்வலுவலகத்தில் ............................................... ஆக சேவையாற்றுகின்றார். அவர் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது. அவர் எவ்வகையிலான ஒழுக்காற்று தண்டனைகள் (எச்சரிக்கை தவிர) எவற்றுக்கும் ஆளாகவில்லையென்பதை இத்தால் சான்றுப்படுத்துவதுடன், இவ்விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை பயன்படுத்துங்கள்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம் /நிறுவனம் :----.
திகதி:----.

10-478/1

## நுவரெலியா மாநகர சபை

நுவரெலியா மாநகர சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள பின்வரும் ஆரம்ப (தேர்ச்சி பெற்ற) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக சபையின் அதிகார பிரதேசத்தில் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.* PL 3 - 2006 A

1. பார வாகன இயக்குநர் III 01

**சம்பள முறைமை.**- 12,470-10x130-10 x 145-10 x 160-12 x 170-ரூபா 18,860

2. **சம்பள அளவுத்திட்டம்** : இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (iv) இல் (PL 3 - 2006 - A) இற்கமைய ரூ. 12,470-10x130-10 x 145-10 x 160-12 x 170- ரூபா 18,860

(III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று வருட (3) காலம் முடிவடைவதற்கு முன்னர் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.)

3. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொது நிபந்தனைகள்.**-

3.1 சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

3.2 விண்ணப்பதாரர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். (சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்தில் சேவையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

3.3 நுவரெலியா மாநகர சபையின் அதிகார பிரதேசத்தில் தொடர்ச்சியாக 3 வருடம் வதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்;
**குறிப்பு** : வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதுமான அளவில் தகுதியானவர்கள் இப்பிரதேசத்தில் இல்லாத பட்சத்தில் மாத்திரமே அருகில் உள்ள உள்ளூராட்சி அதிகார பிரதேச விண்ணப்பதாரர்கள் பற்றி கவனம் செலுத்தப்படும்.

3.4 சகல விண்ணப்பதாரிகளும் நன்னடத்தையுள்ளவர்களாகவும், நல்ல தேகாரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்;

3.5 நெடுஞ்சாலை சட்டக்கோவை பற்றி நல்ல அறிவை கொண்டிருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்**:

4.1 இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியமுடையதுமாகும்.

4.2 விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

4.3 மாநகர ஆணையாளரினால் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் சபை பிரதேசத்தில் வதிவினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

4.4 நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

4.5 III ஆவது வகுப்பில் பதவி வகிப்போரை மூன்று வருடகால பயிற்சிக் கால முடிவில் வேலை, நன்னடத்தை மற்றும் வரவு ஆகியவற்றில் காட்டும் திருப்தி அடிப்படையில் நிரந்தரமாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

4.6 மாநகர ஆணையாளரினால் நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் அவ்வகையில் போதிய அளவு பிணையை பணத்தில் அல்லது நிர்ணயிக்கப்படும் வேறு முறையில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

4.7 தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏனைய பொது நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

4.8 அரச, மாகாண அரச சேவை ஆணைக்குழு, உள்ளூராட்சி ஆணையாளர், நகர ஆணையாளர் ஆகியோரால் தற்போது விதிக்கப்பட்டுள்ளதும், காலத்திற்கு காலம் விதிக்கப்படுவதுமான நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

4.9 01/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து மாகாண அரச சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 5 வருட காலத்திற்குள் அரச சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதியில் தகைமையை பூர்த்தி செய்யாதவர்களின் சம்பள ஏற்றம் நிறுத்தப்படும்.

5. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான கல்வித் தகைமை.**-

5.1 இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கல்வி பொது தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் 2 பாடங்களில் திறமை சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டியதுடன், இதில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உடல் ரீதியிலான தகைமை.**-

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நல்ல கண்பார்வையை கொண்டிருப்பதுடன், பகல் நேரத்திலும், இரவு நேரத்திலும் சேவையாற்றுவதற்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் தகுதியடையவராக இருத்தல் வேண்டும்.

குறைந்தபட்சம் 5 அடி 2 1/2 அங்குல உயரமுடையவராக இருத்தல் வேண்டும்.

5.2 **தொழில்சார் தகைமை.-**

5.2.1 மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு பதவிகளுக்குமான தொகுதிக்குரிய மோட்டார் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல். அதற்கு மேலதிகமாக இயந்திர இயக்குநர் பதவிக்கான அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட (NAITA/ ICTAD) பயிற்சியை பெற்றுக்கொண்டமைக்கான தேசிய தொழில் தகைமையின் 4 ஆம் மட்ட (NVQ4) பயிற்சி சான்றிதழ். இயந்திர இயக்குநர் பயிற்சி சான்றிதழ்.

5.2.2 கொள்கலன் எடை 34 அந்தருக்கு அதிகமான நிறையுடைய மோட்டார் வாகன நிறை ட்ரேலர் மற்றும் 32 பிரயாணிகளுக்கு மேற்படாத எண்ணிக்கையானோரை கொண்டு செல்லக்கூடிய பேருந்துக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல். (ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதிக்கு 3 வருடங்களுக்கு முன் குறைந்த பட்சம் மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள அந்த வாகன வகுப்பின் அனுமதிப்பத்திரத்திற்கு அமைய பீ வகுப்பு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றிருத்தல்)

5.3 **அனுபவம்.-** மோட்டார் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்ட பின் குறைந்தபட்சம் 3 வருட அனுபவத்தை கொண்டிருத்தல். (அனுபவத்தை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

7. **ஆட்சேர்ப்பு முறை.-**

7.1 விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள, நியமனம் பெற்றுக்கொள்வதற்கான ஆகக் குறைந்த தகைமையை கொண்டுள்ள சகலருக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.
தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சைத் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும். அந்நேர்முகப்பரீட்சையில் பின்வரும் ஆவணங்களையும் அதன் நிழற்படப்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்புச்சான்றிதழின் மூலப்பிரதி ;
(ii) உரிய கல்விச் சான்றிதழின் மூலப்பிரதி /பாடசாலையிலிருந்து விலகிய சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நன்னடத்தை சான்றிதழ்கள் ;
(v) வேறு தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;
(vi) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்;
(vii) தொழில் பயிற்சி பற்றிய சான்றிதழ்.

7.2 நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகளுள் ஆகக்கூடிய தகைமைகளைக் கொண்டுள்ளோர் தெரிவு செய்யப்பட்டு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

7.3 நுவரெலியா மாநகர சபையில் தற்போது தற்காலிக, அமைய, பதில் கடமை, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்கள் தொடர்பில் முன் உரிமை அளிக்கப்படும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

8.1 ஒரு விண்ணப்பதாரர் ஒரு பதவிக்காக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

8.2 அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய A4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து 2015.11.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "மாநகர ஆணையாளர், மாநகர சபை, நுவரெலியா" எனும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் போதுமானது)

8.3 விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நுவரெலியா மாகர சபையின் பதவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்த்துக்கொள்ளல்" என குறிப்பிடல் வேண்டும்.

8.4 முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் பாடசாலை அதிபரொருவரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது வருடாந்த சம்பளமாக 2,40,360 ரூபா அல்லது அதற்கு அதிகமாக சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

8.6 தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

9. சேர்த்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் நுவரெலியா மாநகர சபையினால் நிர்ணயிக்கப்படும். விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படுகின்ற காலப்பகுதியில் இவ் ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்தும் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்யும் அல்லது திருத்தம் செய்யும் அதிகாரம் நகர ஆணையாளருக்கு உரித்தாகும்.

பீ. ஜி. சுனில் அபேகோன்,
மாநகர ஆணையாளர்,
நுவரெலியா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
நுவரெலியா,
2015, செத்தெம்பர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண நுவரெலியா மாநகர சபையின் ....................................... பதவிக்கான விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
   முதலெழுக்களைக் குறிக்கும் பெயர்கள் :----.

2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
   பிரதேச செயலாளர் பிரிவு:----.
   கிராம அலுவலர் பிரிவு இலக்கம் :----. பெயர் :----.

3. நிரந்தர வதிவு முகவரி:----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

5. பால் (ஆண்/பெண்) :----. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது:----.
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
   நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் காலம் :----.
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

7. இலங்கை பிரசாவுரிமை பரம்பரையினாலா/பதிவின் மூலமான என்பது :----.
   விபரங்களை குறிப்பிடுங்கள் :----.

8. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பரீட்சைகள் பற்றிய விபரம்)

(i) சித்தியடைந்த ஆண்டு/தரம் :----.
(ii) க.பொ.த. (சா/தரம்) பரீட்சை :----.
சுட்டிலக்கம் :----. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க.பொ.த. (உ/தரம்) :----.
சுட்டிலக்கம் :----. பரீட்சைக்கு தோற்றிய ஆண்டும் மாதமும் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

தொழில் தகைமைகள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) :----.

10. சேவை அனுபவம் :----.
(i) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி:----.
(iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:----.
(iv) இதற்கு முன்னர் சேவை புரிந்த இடமும் வகித்த பதவியும் :----.

11. நீங்கள் குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :----.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும், உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள்/தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நியமிக்கப்படுவதற்கு முன் தெரியவரின் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் தெரியவரின் நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:----.

**தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத்தலைவரின் சான்றுரை**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................................................. அவர்கள் ............... ஆந் திகதி முதல் இவ்வலுவலகத்தில் ........................................ ஆக சேவையாற்றுகின்றார். அவர் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது. அவர் எவ்வகையிலான ஒழுங்காற்று தண்டனைகள் (எச்சரிக்கை தவிர) எவற்றுக்கும் ஆளாகவில்லையென்பதை இத்தால் சான்றுப்படுத்துவதுடன், இவ்விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை பயன்படுத்துங்கள்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம் /நிறுவனம் :----.
திகதி:----.

10-478/2

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அரநாயக்க பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரநாயக்க பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

டீ. எம். சந்ராவதி,
செயலாளர்,
அரநாயக்க பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரநாயக,
2015, செத்தெம்பர் 16.

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | அம்பிட்டிகொடை இறப்பர் தோட்ட சில்வாபுர பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | வெலிகும்புர தெலஹிட்டியாவை பிரதான வீதியில் இருந்து காணித்துண்டு இல. 10 காணி வரை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 47 சீ - மோராகம்மனை |
| பாதையின் நீளம் | : | 198 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தல்கஸ்பிட்டிய பெம்மே கடே அருகிலிருந்து பள்ளிவாயல் வீதி வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | தல்கஸ்பிட்டிய பெம்மே கடே அருகிலிருந்து பள்ளிவாயல் வீதி வரை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 44 C - தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமம் |
| பாதையின் நீளம் | : | 455 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | திப்பிட்டிய ஹெம்மாதகமை பாதையில் தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமத்தின் மதகிற்கு (போக்கு) அருகில் இருந்து தொலகந்தஹேன வத்தை வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | தல்கஸ்பிட்டிய ஹெம்மாதகமை பாதையில் முஸ்லிம் கிராமத்தின் மதகிற்கு (போக்கு) அருகில் இருந்து தொலகந்தஹேன வத்தை வரை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 44 C - தல்கஸ்பிட்டிய முஸ்லிம் கிராமம் |
| பாதையின் நீளம் | : | 450 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 10 அடி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | உடகமை அகலகொட்டுவை பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | அரநாயக்க உடகமை பாதையில் எலிக்லேன்ட் தோட்டத்திலிருந்து அகல கொட்டுவை வயல் ஓடை வரை |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | : | இலக்கம் 43 E - உடகமை |
| பாதையின் நீளம் | : | 560 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

10-333

## கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை

பொது மயான பூமி மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் (11 ஆம் அத்தியாயத்தின்) 5(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

பொது மயான பூமி மற்றும் தனியார் மயான பூமி தொடர்பான 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் (11 ஆம் அத்தியாயத்தின்) 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் கீழே அட்டவணையில் குறித்துரைக்கப்படும் மயானங்களை பூதவுடல் தகனம் செய்யக்கூடிய பொது மயானங்களாக கௌரவ முதல் அமைச்சர் குஸ்திஞ்ஞவடு சான் விஜயலால் த சில்வா அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

டீ. கே. தயாசீலி,
செயலாளர்,
கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிந்த புஹுல்வெல்ல,
2015, ஓகத்து .

| தொடர் இலக்கம் | மயானத்தின் பெயர் | அமைப்பு | வரைபடத்தின் இலக்கமும் திகதியும் | காணியின் பெயர் | எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | அடியாகந்தவத்த | கிரிந்த மகின் இஹல மத்திய | 3382 2014.11.14 | 01 றூட் 22.50 பேர்ச் | வடக்கு : துண்டு இலக்கம் 15 (வீதி); கிழக்கு : துண்டு இலக்கம் 15 (வீதி) ; தெற்கு : துண்டு இலக்கம் 4 எஞ்சிய பகுதி; மேற்கு : பிரதேச சபை வீதி. |

10-357

---

## தெஹிவளை - கல்கிசை மாநகர சபை

வரவு செலவுத்திட்ட விபரம் - 2016

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 212 ஆம் பிரிவின் பிரகாரம் தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விபரம் 2015.10.12 தொடக்கம் 2015.10.18 வரை அலுவலக நேரத்தில் பொது மக்களின் பரிசீலனைக்கு வைக்கப்படவுள்ளது.

தனசிறி அமரதுங்க,
மாநகர பிதா
தெஹிவளை- கல்கிசை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
தெஹிவளை- கல்கிசை,
2015, ஒற்றோபர் 09.

10-376

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.